மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சர்க்கரை இரண்டிலும் ருசி இருக்கிறது. பதநீர்ச் சர்க்கரை சாப்பிடுவதால் "டைபிடீஸ்" போன்ற வியாதிகள் வருவதில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, கனம் உறுப்பினர் இதைப் பரீட்சித்துப் பார்க்குமாறு சிபாரிசு செய்கிறேன்.

திரு. ஆலடி அருணா : அவைத்தலைவர் அவர்களே, பதநீர் சர்க்கரையில் சுண்ணாம்பு வாடை அதிகமாக இருப்பதால், அவை வாங்குகிறவர்களுக்கு அது கவர்ச்சியாக இருக்கவில்லை. ஆகவே, சுண்ணாம்பு வாடை இல்லாத அளவிற்குச் செய்ய அரசாங்கம் செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இதிலே, நிபுணர்களைக் கொண்டு தான் இது செய்யப்படுகிறது. சுண்ணாம்பு வாடை அதிகமாக இருப்பதாகப் புகார்கள் வரவில்லை. அப்படி ஏதாவது இருக்குமானால், அதைக் குறைக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் நாங்குநேரி பகுதிகளில் ஏராளமாக பனை மரங்கள் இருப்பதால், பனஞ்சாறு உற்பத்தி செய்கிறார்கள். ஏற்கனவே குலசேகரப்பட்டணத்தில் பாரி அண்ட் கம்பெனியார் வைத்து இருந்ததைப் போல, ஒரு சர்க்கரை ஆலை நிறுவ முன்வருமா இந்த அரசாங்கம் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சர்க்கரை ஆலையை அரசு சார்பாக நிறுவ உத்தேசம் இல்லை. அதற்காகத்தான், பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும், பல இடங்களில் அப்படி அமைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான், மத்திய சர்க்காரிலிருந்து, இரண்டு அதிகாரிகள் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் மத்திய சர்க்காருக்கு கருத்துக்களை அனுப்புவார்கள். முடிவு வந்த பிறகு, அவசியமான பகுதிகளில் ஏற்படுத்தத் தயங்கமாட்டோம்.

***282 *Q*—THIRU N. S. V. CHITHAN :** Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Government have proposed to issue licences for starting palm sugar factories in this State ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

மூற்பகல் 9-30

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இனியாவது அரசாங்கம் கூட்டுறவுத் துறையிலாவது இந்தத் தொழிற்சாலைகளை அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள கேள்வியோடு தொடர்புள்ள கேள்வி இது. திரு. சித்தன் அவர்கள் ஏற்கெனவே கேட்டு நான் அதற்கு ஏற்கெனவே விளக்கங்களைக் கொடுத்திருக்கிறேன்.

Vigilance and Anti-corruption.

***266 *Q.*—THIRU K. M. RAMASWAMI GOUNDER AND THIRU P. SOUNDARAPANDIAN :** Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether there is any proposal to reorganise the Directorate of Vigilance and Anti-corruption ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) தலைவர் அவர்களே, இத் துறையில் சில அபிவிருத்திகளைச் செய்யும் யோசனை பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. விநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறையிலே அபிவிருத்திகளைச் செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல் கிறார்களே, இந்தத் துறை ஏற்கெனவே வேலை செய்கிற நேரத்தில் என்ன குறைபாட்டை அரசு கண்டது? அந்தக் குறைபாட்டை நிவர்த்திக்க அரசு என்ன யோசனையை வைத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்த யோசனையை இப்போது விளக்குவதற்கு இல்லை. இதை விரிவாக்க வேண்டு மென்பதில் அரசு நாட்டம் செலுத்தியிருக்கிறது. குறைகள் என்ன என்ன என்பது பற்றி கேட்டார்கள். என்ன என்ன குறைகள் என்பதை இப் போது விளக்க முடியாது. பரந்த அளவில் குற்றச்சாட்டுகள் இருக்கும் போது, சமுதாயத்தை அந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்க வேண்டு மென்று அரசு விரும்புகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பொருள்பற்றிய அடுத்த கேள்வியையும் இப்போது எடுத்துக்கொள்ளலாம்.

* 267 வினா.—**திரு. பெ. மலைச்சாமி,**
திரு. வை. சுவாமிநாதன் : } மாண்புமிகு முதல் அமைச் சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1967–68 மார்ச் வரை எத்தனை அதிகாரிகள் மீது லஞ்ச ஊழல் வழக்குகள் தொடுக்கப்பெற்றன ?

(இ) இவர்களில் அரசிதழ் பதிவு பெற்றவர்கள், பதிவு பெறாதவர் களின் எண்ணிக்கை என்ன ?

(உ) எத்தனை வழக்குகள் வெற்றிபெற்றன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) 30 அதிகாரிகள் மீது வழக்குகள் தொடுக்கப்பெற்றன.

(இ) 8 அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் 22 அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகள் (13 தனிப்பட்ட நபர்களும் தொடர்பு கொண்டுள்ள னர்).

(உ) 4 வழக்குகள் வெற்றி பெற்றன.

திரு. எஸ். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளாக இருப்பவர்கள் போலீஸ் துறையைச் சேர்ந்தவர் களாக இருப்பதால் அதை மாற்றி, தனியாக ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசர் அளவில் இயங்கும்படியான முறையில் தனியாக ஒரு குழுவை ஏற்படுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இவைகளை யெல்லாம் பரிசீலித்துக் கொண்டிருப்பதாக நான் முதல் கேள்வியிலேயே பதில் சொன்னேன்.

Thiru B. VENKATASWAMY: May I know the names of officers and their designations ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வெளியிடு வதற்கு இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளுக்கு அதிகாரிகளின்மீது நடவடிக்கை எடுக்க அதிகாரம் இல்லையென்றும், அதனால் பல இடங்களில் பல பேர் தப்பித்துக்கொள் கிறார்கள் என்றும் புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா ? வெளியே இருப்பவர்கள் அப்படிப்பட்ட புகார்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்களே, அது உண்மையா ?